(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 71.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

2011, பெப்புருவரி 08, செவ்வாய்க்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0053/ ’10

1.

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பாராளுமன்ற சட்டம் மூலம் கூட்டிணைக்கப்பட்டு சமூக சேவைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு கிடைக்கின்ற வெளிநாட்டு நிதிகளை கண்காணிப்பதற்கு தற்போதுள்ள பொறிமுறைகள் என்ன என்பதையும்,

(ii) கம்பனிகள் பதிவாளரிடம் பதிவு செய்து சமூக சேவைகள் அல்லது ஆய்வுப் பணிகள் அல்லது பரிந்துரைகளில் ஈடுபட்டுள்ள கம்பனிகளுக்கு கிடைக்கின்ற வெளிநாட்டு நிதிகளை கண்காணிப்பதற்கு தற்போதுள்ள பொறிமுறைகள் என்ன என்பதையும்,

(iii) அவ்விதமான கம்பனிகள் தேவைப்படுத்தப்பட்டவாறு தமது அறிக்கைகளை சமர்ப்பிக்கின்றனவா, வரி தொடர்பான கோவைகளைப் பேணுகின்றனவா, அவற்றிற்கு கிடைக்கின்ற வருமானம் தொடர்பில் செலுத்த வேண்டியுள்ள வரிகளை செலுத்துகின்றனவா என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 1999 முதல் 2010 வரையிலான காலப்பகுதியில் இனக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்திற்கு வெளிநாட்டு மூலங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதி எவ்வளவு என்பதையும், இந்நிதிகள் என்ன நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டன என்பதையும்,

(ii) அந்நிதிகளைப் பெற்றுக் கொண்ட நோக்கத்திற்கு வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஒப்புதல் அளித்ததா என்பதையும்,

(iii) இந்நிதி பயன்படுத்தப்படும் முறை தொடர்பாக ஏதாவது அரசாங்க முகவரினால் கண்காணிக்கப்பட்டதா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0344/ ’10

2.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) குருநாகல் மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 30 ஆம் திகதியளவில் உரித்துடையவர்களாகவிருந்த சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதை அறிவிப்பாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை குருநாகல் மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் சமுர்த்தி பயனாளிகளுக்காக வருடாந்தம் ஒதுக்கிய நிதி தனித்தனியே எவ்வளவு என்பதையும்,

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பண்டுவஸ்நுவர கிழக்கு மற்றும் மேற்கு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவில் சமுர்த்தி பயனாளிகளாக இருந்து நீக்கப்பட்டவர்களின் பெயர், முகவரிகள் யாவையென்பதையும்,

(iii) அவர்கள் நீக்கப்பட்டதற்கான அடிப்படை என்னவென்பதையும்,

(vi) அப்பிரதேச செயாலளர் பிரிவு இரண்டிலும் சமுர்த்தி பயனாளிகளாக புதிதாக சேர்க்கப்பட்டவர்களின் பெயர், முகவரிகள் யாவை என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன் ?

0430/ ’10

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரினைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்கத்திற்குச் சொந்தமான சகல நிறுவனங்களின் பெயர்களையும், அவை ஒவ்வொன்றிலும் இற்றைவரை முதலீடு செய்யப்பட்டுள்ள மூலதனத்துடன் வெவ்வேறாகவும்,

(ii) கடந்த மூன்று வருடங்களாக அத்தகைய நிறுவனங்களில் பணியாற்றிவரும் ஆட்களின் எண்ணிக்கையினையும்,

(iii) அரசாங்கம் அந்நிறுவனங்களில் கொண்டுள்ள பங்குகளின் அளவினையும்,

(iv) மேலே (அ) (i) இலுள்ளவாறான நிறுவனங்களின் கடந்த வருடத்திற்கான இலாப, நட்டங்களை நிறுவன ரீதியில் வெவ்வேறாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) (அ) (i) இலுள்ள நிறுவனங்களில், அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிற்கோ அல்லது அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கோ அறிக்கையிடாத நிறுவனங்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அறிக்கையிடாமைக்கான காரணத்தையும்,

(iii) இது அரசியலமைப்பின் பிரிவு 148 ஐ மீறுகின்ற ஒரு செயலா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0572/ '10

4.

கௌரவ அஜித் குமார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 06/2006 (iv) ஆம் இலக்க மற்றும் 2007.08.24 ஆம் திகதிய பொது நிருவாக சுற்று நிருபத்தின்படி மின்னயில் மருத்துவ தொழில்நுட்பவியல் விஞ்ஞானி மற்றும் முகாரி (விசேட) ஆசிய பதவிகளுக்கு MN-7-2006 A குறியீட்டு இலக்கத்துக்கான சம்பளத்தை வழங்கும்படி பணிப்பாளர் (உயிர் மருத்துவப் பொறியியல் சேவை) BES/පුලි/විවිධ991 மற்றும் 2009.08.25 ஆம் திகதிய கடித மூலம் ஸ்ரீ ஜயவர்தனபுர பெரிய ஆஸ்பத்திரிக்கு அறிவித்துள்ள போதிலும் குறிப்பிட்ட ஆஸ்பத்திரியில் இந்தப் பணியாள் தொகுதியினருக்கு MT2-2006A குறியீட்டிலக்க குறைந்த சம்பளம் மட்டுமே வழங்கப்படுகிறது என்பதையும்,

(ii) இப்பணியாள் தொகுதியினரைவிடக் குறைந்த சம்பள மட்டத்தில் இருந்த சிவில் (மின், கட்டிட) முகாரி (Forman) பதவிகளுக்கு MN-7-2006A குறியீட்டிலக்க சம்பளம் வழங்கப்படுவதனால் சம்பள முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இந்த ஆஸ்பத்திரியிலுள்ள அனைத்து அனைத்து மருத்துவ உபகரணங்கள் (medical equipment) மற்றும் கதிர் இயக்க உபகரணங்களின் (X - Ray machine) பராமரிப்பு போன்ற அத்தியவசிய சேவைகளையாற்றும் இந்த மின்னியல் மருத்துவ மருத்துவத் தொழில்நுட்பவியல் விஞ்ஞானப் பணியாளர் தொகுதியினரை சிபாரிசு செய்யப்பட்ட சம்பள மட்டத்தில் அமர்த்தி இவர்களுக்கான நிலுவைச் சம்பளத்தையும் வழங்க அவர் நடவடிக்கை மேற்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

0787/ '10

5.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— சமூக சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும்,

(i) பேணிவரப்படுகின்ற முதியோர் இல்லங்களில் தங்கிவாழும் முதியோர்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) முதியோர் இல்லங்களில் தங்கிவாழ்கின்றவர்களுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற வசதிகள் மற்றும் சேவைகள் யாவை,

(iii) மேற்படி இல்லங்களில் வசதிகளை வழங்குவதற்காக அரசாங்கத்தினால் ஒரு வருடத்திற்கு செலவிடப்படுகின்ற பணத்தொகை எவ்வளவு

என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் முதியோர் இல்லங்களின் வசதிகளையும் சேவைகளையும் மேம்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்,

(ii) இதற்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கின்ற தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0873/ '10

6\.

கௌரவ சாந்த பண்டார,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருநாகல் மாவட்டத்தின் சமுர்த்தி பெறுநர்கள் இருக்கின்றார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சமுர்த்தி வேலைத்திட்டத்தின் ஆரம்பம் முதல் 2004 ஆம் ஆண்டு வரையிலும், அத்துடன் 2010 ஆம் ஆண்டிலும் மேற்படி வேலைத்திட்டத்தின் மூலம் வலுவூட்டப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்,

(ii) சமுர்த்தி நிவாரணங்களுக்கென 2010 ஆம் ஆண்டிற்காக குருநாகல் மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதித்தொகை யாது என்பதையும்,

(iii) மேற்படி நிதி உரிய நேரத்தில் சமுர்த்தி பெறுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0876/ '10

7\.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) கம்பஹா மாவட்டத்தில், அத்தனகல்ல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திஹாரிய, பண்டாரநாயக்க பிளேஸ், 569/49 பீ ஆம் இலக்க வீட்டில் வசிக்கும் திரு. எம்.ஜே.எம். உவைஸ் மற்றும் அவரில் தங்கி வாழ்பவரான முதியவர் ஏ.சீ.நூர்நைமா (75 வயது) ஆகியோர் குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தின் அங்கத்தவர்களாக இருப்பினும் இதுவரை இவர்களுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவில்லையென்பதை அவர் அறிவாரா?

(ஆ) வாழ்வதற்கு நிரந்தரத் தொழிலின்றி இன்னோரன்ன கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் திரு. உவைஸுக்கும் அவரில் தங்கிவாழ்பவருக்கும் தாமதமின்றி சமுர்த்தி நிவாரணத்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா?

(இ) இன்றேல், என்?

0484/ '10

8\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— மின்வலு, எரி சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புத்தளம் முதல் மன்னார் வரையான பிரதேசத்தில் காற்று விசையால் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு ஏதேனும் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனின், மதிப்பீட்டுக்கு அமைய அந்த கருத்திட்டத்திற்கு எவ்வளவு தொகை செலவாகும் என்பதையும்,

(iii) அதில் பிறப்பாக்கம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் மின்சாரம் மெகவோட் அளவில் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தை அமுலாக்குவதற்கு இதுவரையில் விண்ணப்பதாரிகள் எவரேனும் இருக்கின்றனரா என்பதையும்,

(ii) ஆமெனின், அந்த நிறுவனங்களினதும் நாடுகளினதும் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0579/ '10

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சுற்றுலாத்துறை எனும் விடயம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழா வருகின்றது என்பதை அவர் அறியத்தருவாரா?

(ஆ) (i) அனுராதபுரம், யாழ்ப்பாணம், திருகோணமலை, மாத்தறை, மட்டக்களப்பு, புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்ற சுற்றுலா ஹோட்டல்களின் எண்ணிக்கையினை நட்சத்திர வகுப்பு அடிப்படையில் வெவ்வேறாகவும்,

(ii) இந்த ஹோட்டல்களில் வருடாந்தம் கிடைக்கக்கூடியதாகவுள்ள அறைகளின் எண்ணிக்கையினையும்

அவர் இச் சபைக்கு அறியத் தருவாரா?

(இ) (i) மேலேயுள்ள பிரதேசங்களில் நிலைபேறான சுற்றுலாத்துறை மேம்பாட்டு முன்னெடுப்பு ஒன்று எவ்வாறு விருத்தி செய்யப்படும் என்பதையும்,

(ii) 2010/2011 ஆண்டுகளில் இலங்கையில் சுற்றுலாத்துறையினை மேம்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்த வரவு செலவுத் தொகையினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0788/ '10

10.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும்,

(i) பேணிவரப்படுகின்ற சிறுவர் இல்லங்களில் தங்கிவாழும் சிறுவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி சிறுவர் இல்லங்களில் தங்கிவாழ்கின்றவர்களுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற வசதிகள் மற்றும் சேவைகள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி இல்லங்களில் வசதிகளை வழங்குவதற்காக அரசாங்கத்தினால் ஒரு வருடத்திற்கு செலவிடப்படுகின்ற பணத்தொகை எவ்வளவென்பதையும்

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறுவர் இல்லங்களின் வசதிகளையும் சேவைகளையும் மேம்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்,

(ii) இதற்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கின்ற தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0857/ '10

11.

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தென் மாகாணத்தில் மாகாண சபைக்கும் மத்திய அரசுக்கும் உரிய ஆசிரியர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய நிலுவைச் சம்பளங்கள் தொடர்பாக மாகாண கல்வி அமைச்சினால் ஆய்வுகள் செய்யப்பட்டள்ளனவா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், அந்த ஆய்வின்படி தென் மாகாண ஆசிரியர்களுக்கு நிலுவைச் சம்பளம் செலுத்த இருக்கின்றதா என்பதையும்,

(iii) அவ்வாறு நிலுவைச் சம்பளங்கள் செலுத்த இருப்பின் 2010.01.01 ஆந் திகதியாகும் போது ஒவ்வொரு கல்வி வலய மட்டத்திலும் தென் மாகாண ஆசிரியர்களுக்கு செலுத்த வேண்டியுள்ள நிலுவைச் சம்பளங்களின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறிய நிலுவைச் சம்பளங்களை செலுத்துவதற்கு அரசு நிதி ஒதுக்கியுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறு ஒதுக்காவிடின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) நிலுவைச் சம்பளங்கள் செலுத்தாமையினால் மேற்படி ஆசிரியர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதா என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், மேற்படி ஆசிரியர்களுக்கு எத்தினத்தில் நிலுவைச் சம்பளங்கள் செலுத்தப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0538/ '10

12.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், திருகோணமலை - புல்மோட்டை வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது என்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல் , வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0596/ '10

13\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த 10 வருடங்களுக்கான,

(i) அரசாங்கத்தின் மொத்த உண்மையான செலவினையும் (நிகர பொருளாதாரப் புரள்வு),

(ii) நேரடி மற்றும் மறைமுக வரிகள் மூலமாக ஈட்டபட்ட அரசாங்கத்தின் வருமானத்தினை வெவ்வேறாகவும்,

(iii) அரசாங்கத்தின் மூலதன மற்றும் மீண்டெழும் செலவினையும்,

(iv) நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியினையும்,

(v) அரசாங்கத்தின் வரவுவெலவுத் திட்டப் பற்றாக்குறையையும்

வருடாந்த அடிப்படையில் அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை ஈடுசெய்ய எங்கிருந்து நிதி பெறப்பட்டதென்பதையும் அதற்காகப் பெறப்பட்ட கடன்களுக்கான வட்டிக் கிரயத்தையும்,

(ii) இந்த வாழ்க்கை முறைக்கு ஈடுகொடுக்க முடியுமா என்பதையும், நாடு கடன் பொறியினை நோக்கிச் செல்கின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்கள்

1.

சுகாதார அமைச்சர்,— உணவு (திருத்தம்),— 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 8.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 6.30 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

4.

கௌரவ விஜயதாஸ ராஜபக்ஷ,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

“மகமெவுனாவ சதஹம் சேவாவவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்”

5.

கௌரவ அகிலவிராஜ் காரியவசம்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

“இலங்கையிலுள்ள சகல பிள்ளைகளுக்கும் இலவசக் கல்வியை வழங்குவதற்கு வழிசமைப்பதற்கானதோர் சட்டமூலம்”

6.

கௌரவ தாராநாத் பஸ்நாயக்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.3),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

“எஸ்.பீ. நாவின்ன மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்”

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால், மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2011, பெப்புருவரி மாதம் 03ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 (3), 14 மற்றும் 20 ஆம் பிரிவுகளின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2010, நவெம்பர் மாதம் 22 ஆம் திகதிய 1681/12 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 (3), 14 மற்றும் 20 ஆம் பிரிவுகளின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2010, திசெம்பர் மாதம் 24 ஆம் திகதிய 1685/25 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2011.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்— "1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 5.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2011, சனவரி 04) [1].

* 7.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2011, சனவரி 04) [1].

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.